பணியாட்களின் செயல்திறன் மேம்பாட்டுக்கான பயிற்சிகளுக்கும் இந்நூலைப் பயன்படுத்தலாம்.

**-சச்சிதானந்தவளன்,**
திட்ட இயக்குநர், அட்ரா இண்டியா.

முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை என்ற நம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தியது இந்நூல். என் வாழ்க்கையில் அர்த்தத்தையும், என் மீது எனக்கே நம்பிக்கையையும் ஏற்பட்டது இந்நூலை படித்தபின்தான்.

நீண்ட காலமாக எவ்வித நோக்கமும், குறிக்கோளும் இன்றி வாழ்ந்து விட்ட நான் இந்நூலை படித்தது முதல் மிஞ்சியுள்ள என் வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் அர்த்தத்துடனும், உபயோகமாகவும் கழிக்கிறேன்.

மிகச்சிறந்த நூல். இளைஞர்களுக்கு மிகச்சிறந்த வழிகாட்டி, தமிழ் சமுதாயத்திற்கு ஆசிரியர் தொடர்ந்து இதுபோன்ற நூல்களை தர வேண்டும்.

கலாம் கனவு கண்ட இந்தியா உருவாக, இதுபோன்ற நூல்கள் பள்ளி மற்றும் கல்லூரி பாட புத்தகத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

**- என்.எம்.இக்பால்**
பத்திரியையாளர், கன்னியாகுமரி

ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது முடியும் என்ற தன்னம்பிக்கையை 'ஆளுமை வளர்ச்சி' நூல் என்னுள் ஏற்படுத்தியுள்ளது. நான் ஆசிரியர் என்பதால் இந்நூல் என்னுள் ஏற்படுத்திய தாக்கத்தை பாடங்களுக்கு இடையே அவ்வப்போது தெரிவித்து மாணவர்களையும் மேம்படுத்தி வருகின்றேன்.

தமிழகம் முழுவதும் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு 05.12.2009 அன்று ஆளுமை வளர்ச்சி பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில், காரைமைந்தனின் ஆளுமை வளர்ச்சி நூலில் உள்ள கருத்துக்களையும், பயிற்சிகளையும் நான் பகிர்ந்து கொள்ள, நல்ல வரவேற்பு கிடைத்தது.

**- வே.சீனிவாசன்,**
பட்டநிலை ஆசிரியர், வடசென்னாமலை.